[2004 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மருத்துவமனையில் 6 ஆம்புலன்ஸ்களும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. 2 அமரர் ஊர்திகள் மிகவும் பழமையான நிலையில் இருப்பதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு பணிமனைக்குக்கொண்டு சென்று பழுதுகள் சரிபார்க்கப்பட்டு மீண்டும் இயக்கப்படுகின்றன. இதில் ஓர் ஊர்தி கழிவு செய்யப்படும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு அதற்குப் பதிலாக வேறொரு ஆம்புலன்ஸ் வாகனம், அமரர் ஊர்தியாக மாற்றப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

42—

அம்மை குத்துதல்

***42394—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தை பிறந்தவுடன் அம்மை குத்தும் பழக்கம் நிறுத்தப்பட்டு விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலும் மற்றும் இந்தியாவிலும் அம்மை நோய் 1978 ஆம் ஆண்டிலேயே ஒழிக்கப்பட்டுவிட்டது. அம்மை நோயை உண்டாக்கும் கிருமிகள் நாட்டிலிருந்து அடியோடு அகற்றப்பட்டு விட்டதால் யாருக்கும் அம்மை நோயால் பாதிப்பு இல்லை. ஆகவே அம்மை குத்துதல் தேவைப்படாததால் அது நிறுத்தப்பட்டு விட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2004 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

43—

சத்துணவுக் கூடங்கள்

***32333—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள அனைத்து பள்ளிகளின் சத்துணவுக் கூடங்களுக்கு எல்.பி.ஜி. சமையல் எரிவாயு அடுப்பை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்துணவுக் கூடங்களில் விறகு அடுப்புக்குப் பதிலாக எல்.பி.ஜி. எரிவாயு அடுப்பைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதியில், சீர்காழி ஒன்றியம் மற்றும் கொள்ளிடம் ஒன்றியம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமார் 203 சத்துணவுக் கூடங்களும் 81 ஊட்டச் சத்து மையங்களும் உள்ளன. இவற்றில் சமையல் செய்வதற்கு விறகுகளைப் பயன்படுத்துவதால் அருகிலுள்ள பள்ளி மாணவ, மாணவிகள் புகையினால் மிகவும் பாதிப்பு அடைகின்றனர். மேலும், இதற்கான செலவினங்களும் அதிகமாக உள்ளன. சுற்றுப்புறமும் மாசுபடுகின்றது. எனவே இதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மேற்கண்ட அனைத்து சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஊட்டச் சத்து மையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.